(4) நடைமுறைக் கேள்வி

வினா நேரம் முழுமையும் பயன்படுத்தப்படவில்லை எனவும், துணை வினாக்கள் கேட்கப் போதிய வாய்ப்பு கொடுக்கப்படவில்லை எனவும் சொல்லப்பட்டது குறித்து

திரு. டி. மார்டின் : பாயிண்ட் ஆஃப் ஆர்டர் சார். பேரவைத் தலைவரவர்களே, கேள்வி நேரம் 10 மணி வரைக்கும் உண்டு. ஆனால் அநேகமாக, கேள்விகள் துணைக் கேள்வி கேட்பதற்கு நானும் மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களின் கவனத்தை ஈர்ப்பதற்காக என்னுடைய கைகளை உயர்த்திக் கொண்டிருந்தேன். அதிகக் கேள்விகள் கேட்க எனக்கு வாய்ப்பில்லாவிட்டாலும் பரவாயில்லை. ஆனால் பத்து மணி வரைக்கும் அந்தப் பொன்னான நேரத்தைத் தாங்கள் கேள்விகளுக்காக ஒதுக்கீடு செய்திருக்கும்பொழுது அதற்கு முன்னாலேயே கேள்வி நேரத்தை முடித்துவிட்டு, இன்று மானியக் கோரிக்கைக்குப் போய்விட்டீர்கள். ஆகவே, தயவு செய்து 10 மணி வரைக்கும் எல்லோரும் கேள்வி கேட்கக்கூடிய முறையில் வாய்ப்புக் கொடுத்து, அதற்குப் பிறகு மானியக் கோரிக்கைகளை எடுத்துக் கொள்வீர்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : முதல் மணி நேரம் கேள்வி நேரம் தான். ஆனால், கேள்விகள் இல்லை, அல்லது துணைக் கேள்விகள் கேட்பதற்கு உறுப்பினர்கள் கையைத் தூக்கவில்லை என்ற ஒரு நிலைமை ஏற்படுகிற நேரத்தில், அந்த ஒரு மணி நேரத்தில் பாக்கி நேரம் சும்மா உட்கார்ந்து இருக்கவேண்டுமென்று விதிமுறை இல்லை. முதல் அவர் குவெஸ்சின் அவர் அவ்வளவுதான். அந்த ஒரு மணி நேரமும் கட்டாயமாகக் கேள்வி நேரத்திற்கு ஒதுக்க வேண்டும் என்பது விதிமுறை இல்லை. மேலும் திரு. மார்டின் அவர்கள் தனக்கு வாய்ப்புக் கொடுக்கவில்லை என்று சொல்லுகிறார். அவர்களுக்கு துணைக் கேள்விகள் கேட்க நிறைய வாய்ப்புக் கொடுத்துக் கொண்டுதான் இருக்கிறேன். அவர் கையை எழுப்பும் பொழுதெல்லாம் கூப்பிட்டுக் கொண்டுதான் இருக்கிறேன். ஆனால், இன்று மார்டின் அவர்கள் அங்கிருந்து கொண்டே கையைத் தூக்காமல், 'ஸார், ஸார்' என்று குரல் எழுப்பினார். அதைத் தவிர்க்க வேண்டும் என்பதற்காகத்தான் இன்றைக்கு திரு. மார்டின் அவர்களுக்கு கொடுக்கும் வாய்ப்பை கொஞ்சம் குறைத்துக் கொண்டேன் என்பதை திரு. மார்டின் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

THIRU K. VINAYAKAM : It is an avowed principle in all democratic institutions that a Member should try to catch the eye of the Speaker. But your eye is such an elusive object. You see us but I do not know whether your conscience permits you to call us.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. விநயகம் அவர்களுக்கு கண் கெட்டிருக்கிற அளவுக்கு என்னுடைய கண் கெட்டிருக்கவில்லை. எல்லா உறுப்பினர்களையும் பார்க்கிறேன். எல்லா உறுப்பினர்களின் பெயரையும் தெரிந்து கொண்டிருக்கிறேன். இந்தக் கோடியில் திரு. மார்டின் அவர்களையும், அந்தக் கோடியில் இருக்கும்

திரு. ஆறுமுகம் அவர்களையும், ஆகிய இருவர்களையும் பார்க்கக் கூடிய அளவுக்கு என் கண் பார்வை இருக்கிறது. ஆகவே, எல்லா உறுப்பினர்களையும்தான் நான் பார்க்கிறேன். யாரையும் பார்க்க வில்லை என்ற குறை வேண்டாம். திரு. மார்டின் அவர்கள் துணைக் கேள்வி கேட்கவேண்டுமென்றால் கையை உயர்த்துவதுதான் பழக்கம். ஆனால், இன்று அப்படியில்லாமல், 'ஸார்', 'ஸார்', 'ஸார்' என்று குரலை அங்கிருந்துகொண்டே எழுப்பிக் கொண் டிருந்தார். அதைத் தவிர்க்கவேண்டும், அதை அவர் உணர வேண்டும் என்பதற்காகத்தான் இன்று அவருக்கு நான் அதிக வாய்ப்புக் கொடுக்கவில்லை.

THIRU K. VINAYAKAM : You have not heard me, Sir. There was a ruling in the other House, viz. Lok Sabha, that a Member should try not only to attract the 'eye' of the Hon. Speaker but also the 'ear'. There was a rling like that yesterday. We follow the Mother of Parliaments or the Lok Sabha. At least now please give a ruling whether we can draw your attention by the 'eye' or 'ear' also, if possible.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: கையைத்தான் தூக்க வேண்டும். அப்படியல்லாமல், இருக்கிற 234 உறுப்பினர்களும் 'பேரவைத் தலைவர்', 'பேரவைத் தலைவர்', 'ஸார்', 'ஸார்', 'ஸார்', என்று கூப்பிடுவதாக இருந்தால், ஒன்றுமே நடைபெறாது.

திரு. மார்டின் எழுந்தார்.

MR. SPEAKER : Please sit down.

THIRU T. MARTIN : On a point of Order, Sir. Under Rule 22 of our Assembly Rules, it is stated as follows :—

"The first hour of every sitting shall unless the House unanimously resolves otherwise, be available for the asking and answering of questions. The Speaker may, in his discretion, exted the time for questions".

Mr. Speaker, Sir, I want a ruling from the Chair. The first hour is allotted as 'question hour'. The Hon. Speaker has got discretion to extend the time, with the leave of the House. But from this rule I understand that the Hon. Speaker has no power to decrease the time which has been allotted for question-hour. My submission is today the Hon. Speaker has limited the questions before seven minutes to 10.00 A.M. I want to know from the Hon. Speaker whether it is proper, in view of Rule 22 of our Assembly Rules. I want your ruling on that.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அதற்கு நான் முன்பே ஒரு நிலைமையைச் சொன்னேன். முதல் மணி கேள்விகளுக்காக ஒதுக் கப்பட்டிருக்கிற மணி என்று விதி முறையில் கொடுக்கப்பட்டிருந் தாலும், போதிய கேள்விகள் இல்லை என்ற நிலை ஏற்படலாம். அல்லது துணைக் கேள்விகள் கேட்பதற்கு உறுப்பினர்கள் விரும் பாத ஒரு நிலை ஏற்படலாம். அப்படிப்பட்ட நேரத்தில் அரை மணி நேரத்தில் கேள்விகள் முடிந்துவிட்டால், பாக்கி உள்ள அரை மணி நேரத்தை ஒன்றுக்குமே பயன்படுத்தக் கூடாது என்று சொல்லி, அதை வீணாக்க முடியாது. ஆகவே, அந்த நிலையும் இருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.